உ

# தைவமும்

# பௌருஷமும்

By

ஆர். எஸ். என். ராமகிருஷ்ணன்

# தைவமும் பௌருஷமும்

எதற்குப் பிறப்பு உண்டோ அது "காரியமாம்". ஒரு காரியம் ஏற்பட வேண்டுமானல் அக்காரியத்திற்கு முன்பு ஒரு காரணம் அவசியம் இருக்கவேண்டுமென்று நாம் ஒவ்வொருவரும் நம்புகின்ருேம். சரீரத்தையுடைய நம்மோவ்வொருவரின் பிறப்பும் ஒரு காரியமாகும். நம்முள் சிலர் பிறக்கும்பொழுதே அழகான சரீரத்துடன் பிறக்கின்றனர். மற்றும் சிலர் அவ்வாறில்லாமல் அவலக்ஷணத்துடனும் அங்கஹீனத்துடனும் பிறக்கின்றனர். இப்பேர்ப்பட்ட விவிதமான நம்முடைய பிறப்பாகின்ற காரியத்திற்கு ஈசுவரனைக் காரணமாகச் சொல்லுவது மனதிற்குச் சமாதானத்தைக் கொடுக்காது. ஏன் ஈசுவரன் ஒருவனுக்கு அழகான சரீரத்தையும் மற்ருெருவனுக்கு விகாரமான சரீரத்தையும் கொடுக்கின்ருர் என்று மறுபடியும் சந்தேகம் பிறக்கும். ஆகையால் அவனவன் செய்த கர்மாவைக் (செய்கையை) காரணமாக ஒப்புக்கொண்டால்தான் யுக்திக்குப் பொருத்தமாக இருக்கும். காரணம் என்பது காரியத்திற்கு முன்பு இருக்கவேண்டுமாதலால் நம்முடைய விவிதமான இப்பிறப்பாகின்ற காரியத்திற்கு, இப்பிறப்பிற்குப் பின் செய்யப்பட்ட நம்முடைய கர்மாவைக் காரணமாகச் சொல்ல முடியாது.

ஆதலால் இப்பிறப்பிற்கு முன் செய்யப்பட்ட கர்மாவைத்தான் காரணமாகச் சொல்லவேண்டும். எனவே முற்பிறப்பை அவசியமாக ஒப்புக்கொள்ள வேண்டியிருக்கின்றது. சுருதிஸ்மிருதிகள் ஜீவனுக்குப் பல பிறப்புக்கள் உண்டும் என்றும், ஒரு பிறப்பிற் செய்யப்படும் செய்கை தான் முற்கூறிய விவிதமான பிறப்புக்களுக்குக் காரணமென்றும் தெரிவிக்கின்றன. ஒருவர் இந்த ஜன்மாவில் (பிறப்பில்) உழைக்காமல் பிறப்பினுலேயே தன் பிதாவினுடைய சொத்தை அடைகின்ருரென்ருல் அவர் முற்பிறப்பில் அச்சொத்தை அடைய நற்செய்கையைச் செய்திருக்கின்ருர் என்றே அறியவேண்டும். சில காலஞ் சென்று அச்சொத்தை இழக்க நேரிட்டால் அவருடைய நற்செய்கை தன்னுடைய பலனைக் கொடுத்துவிட்டு நாசமடைந்து விட்டது என்று எண்ணவேண்டும். இந்த ஜன்மாவில் பாபஞ் செய்யாதவருக்குத் துன்பம் ஏற்பட்டால் அதற்கு அவருடைய முற்பிறப்பில் செய்யப்பட்ட பாபச் செயலைத் தான் காரணமாகச் சொல்லவேண்டும். "ஆணிமாண் டவ்வியர்" என்னும் முனிவர் அந்த ஜன்மாவில் ஒரு பாபமும் செய்யாதிருந்தும் திருடர் என்று கருதப்பட்டு கழுவில் ஏற்றப்பட்டார் என்றும் அக்கஷ்டத்தை அவரடைவதற்கு வாஸ்தவமான காரணம் முற்பிறப்பில் சிறு பையனுக இருக்கும்பொழுது ஈயை ஊசியில் கோர்த்து விளையாடின பாபச் செயல்தானென்றும் கூறப்படுகின்றதல்லவா? சுருங்கக் கூறின் அவனவனுடைய இன்ப துன்பங்களுக்கு அவனவன் செய்த கர்மாவைத்தான் காரணமாகக் கருத வேண்டும். முற்பிறப்பில் செய்யப்பட்ட கர்மாவைத்தான் "தைவம்" என்றும் "விதி" என்றும் அழைக்கின்ருேம். அதாவது ஒரு ஜன்மாவில் செய்யப்பட்ட கர்மாவே சூக்ஷ்மமாக இருந்துகொண்டு மறு ஜன்மாவில் "தைவம்" என்று

அழைக்கப்படுகின்றது. இப்பிறப்பில் செய்யப்படும் கர்மாவை "பௌருஷம்" என்றும் "புருஷப்பிரயத்தனம்" என்றும் அழைக்கின்றோம். இந்த பௌருஷத்தால், விதியை நாசஞ் செய்வது சாத்தியமா — இல்லையா — என்ற பிரச்சினை தொன்று தொட்டு இருந்து வருகின்றது.

ஒரு சித்தாந்தத்தில் — பௌருஷத்தைப் போல் தைவமும் தன்னால் சம்பாதிக்கப்பட்டதுதானே. அப்படியிருக்கும்பொழுது பௌருஷத்தால் தைவத்தை அதாவது விதியை நாசஞ் செய்வது எவ்வாறு அசாத்தியமாகும்? தைவத்தைக் காட்டிலும் பௌருஷத்திற்குப் பலம் அதிகமாக இருந்தால் பௌருஷத்திற்கு ஜயமுண்டாகவே செய்யும். பௌருஷமிருந்தும் எங்கு தைவத்தை வெல்ல முடியவில்லையோ அங்கு பிரயத்தனஞ் செய்தது போதாது என்றே கொள்ளவேண்டும். இந்த ஜன்மாவில் செய்யப்பட்ட பாபச் செய்கையை இந்த ஜன்மாவிலேயே பௌருஷத்தால் அதாவது பிராயச்சித்த கர்மாவைச் செய்து நாசஞ் செய்வது சாத்தியமானால் ஏன் முற்பிறப்பிற் செய்யப்பட்ட செய்கையை இந்த ஜன்மாவில் பௌருஷத்தால் நாசஞ் செய்ய முடியாது? முன் செய்யப்பட்ட கர்மாவிற்குப் பின் செய்யப்படுகின்ற கர்மாவைக் காட்டிலும் பலம் அதிகமென்பது இயற்கை என்று ஒப்புக்கொள்ள முடியாது. நேற்று அதிகமாகச் சாப்பிட்டதாலேற்பட்ட அஜீர்ணம் இன்று ஔஷதம் சேவிப்பதால் நிவிர்த்தியடைகின்றதல்லவா? மேலும் பௌருஷத்தால், தைவத்தை வெல்ல முடியாது என்று ஒப்புக்கொண்டால் தைவத்தினாலேற்பட்ட வியாதி முதலிய துக்கத்தை நிவிர்த்தி செய்வதற்குப் பரிஹாரங்களைக் கூறும் சாஸ்திரங்களுக்கு அர்த்தமின்மையைக் கூறினதாக ஆகும். தைவம் மிகவும் அதிக

மான பலத்துடனிருந்தால் அதை வேருடன் நாசஞ் செய்ய முடியாவிடினும் அதனுடைய வேகத்தையாவது சற்று குறைத்துக்கொள்ள முடியும் — என்று ஒப்புக்கொள்ளப் பட்டிருக்கின்றது.

மற்றும் ஒரு சித்தாந்தத்தில் – தைவத்தைப் பௌரு ஷத்தால் அதாவது ஜபம், தானம், யக்ஞம் முதலான இப் பிறப்பில் செய்யப்படும் கர்மாக்களால் நாசஞ் செய்ய முடியாது — என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது.

முற்கூறிய இரண்டு சித்தாந்தங்களில் முதலில் கூறப் பட்ட சித்தாந்தத்தில் முற்பிறப்பிற் செய்யப்பட்ட பாபத் தின் பலனான வியாதி முதலியவற்றைப் பரிகாரஞ் செய்து நிவிர்த்தி செய்துகொள்ள முடியும் என்று ஒப்புக்கொள்ளப் படுவதாயும், இரண்டாவது சித்தாந்தத்தில் பாபபலனை அனு பவிப்பதைத் தவிர வேறு கதியில்லை என்று ஒப்புக்கொள்ளப் படுவதாயும் ஒருவர் நினைக்கலாம். ஆனால் இரண்டாவது சித்தாந்தத்திலும் பௌருஷத்தினால் வியாதி முதலியவற்றை அனுபவிக்காமலிருக்கும்படி செய்துகொள்ள ஓரளவு சாத் தியம் தான் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகவே அறியவேண்டும். இவ்விஷயத்தை இங்கு சொல்லப்போகும் நான்கு சரித்திரங்களையும் அவ்வொவ்வொரு சரித்திரத்தின் முடிவில் காண்கின்ற வாக்கியங்களையும் நன்கு பார்வை யிட்டால் அறிய முடியும் என்று நான் நம்புகிறேன்.

முதற் சரித்திரத்தில், பூர்வ ஜன்மாவிற் செய்த கர் மாவை நாசஞ்செய்ய முடியாது என்ற அபிப்பிராயத்தை வெளியிடும் “விருகன்” என்ற அரசனுடைய வாக்கியங்கள் தென்படுகின்றன. இரண்டாவது சரித்திரத்தில் பௌரு ஷத்தின் சக்தி விஷயமாக ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாளுக்கு

சாஸ்திரங்களிலிருந்து கிடைத்த தீர்மானம் அறியப்படு கின்றது. மூன்ருவது சரித்திரம் முற்பிறப்பில் ஐசுவரியத் திற்குக் காரணமான நற்செய்கையைச் செய்யாத அந்த ணருக்கு ஐசுவரியம் கிடைத்த வரலாருகும். நான்காவதும் கடைசியுமான சரித்திரம் சத்தியத்தை நிலைநாட்ட வேண்டு மென்ற சுபாவத்துடன் கூடிய "நந்தினீ" என்ற பசுவின் புண்ணிய கதையாகும்.

## முதற் சரித்திரம்.

முன்ஞெரு காலத்தில் "விருகன்" என்ற ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு ஒரு பெண் இருந்தாள். அவ ளுடைய பெயர் "சர்மிஷ்டை". சோதிடர்கள் அப்பெண் ணின் ஜாதகக் குறிப்பைப் பார்த்து இவள் சூரியன் சித்திரை நக்ஷத்திரத்திலிருக்கும் பொழுது சதுர்தசி திதியில் பிறந்தவ ளாவாள். இவ்வாறு ஜனித்தவளை சாஸ்திரங்கள் விஷகன் னிகை என்று கூறுகின்றன. இவளை விவாஹம் செய்து கொள்ளுபவன், விவாஹத்திலிருந்து ஆறு மாதத்திற்குள் இறந்துபோவான். மேலும் இவள் உன்னுடன் இருக்கக் கூடாது. இருந்தால் உனக்குக்கேடு உண்டாகும். சீக்கிரம் இவளை எங்கேயாவது விட்டுவிட்டு க்ஷேமமாக இரு என்று அரசனிடம் சொன்னர்கள்.

விருகன் இதைக்கேட்டு, எனக்குக் கேடு உண்டாக இவள் என்னுடனிருப்பது எவ்வாறு காரணமாகும்? அவ னவன் சுகதுக்கத்திற்கு அவனவன் முற்பிறப்பிற் செய்த கர்மா அல்லவா காரணம். எந்தக் காரியத்திற்கும் முற்

பிறப்பிற் செய்த கர்மாவைத்தான் காரணமாகச் சொல்ல வேண்டியிருக்கின்றது. ஸ்திரீயின் வயிற்றில் அன்னம் முதலானவை நாசமடைகின்றன. அதே வயிற்றில் கரு வளர்கின்றது. கர்மா அல்லவா கருவின் வளர்ச்சிக்குக் காரணம். தீபத்தின் ஒளி, விளக்கில் எண்ணெய் இருக்கும் வரையில் இருப்பது போல, ஜீவனுக்கு சுகதுக்கம் அவனிடம் கர்மா இருக்கும் வரையில் இருக்கும். தானம் செய்தோ, ஜபம் செய்தோ மற்றும் எந்த உபாயத்தாலோ கர்மாவை நாசம் செய்ய முடியாது. கர்மா தன்னுடைய கர்த்தாவை நிழல் போல் தொடரும். பூர்ணமாகப் பலனைக் கொடுத்தாலொழிய நாசத்தை அடையாது. வருவன வந்தே தீரும் என்று மனதில் தீர்மானம் செய்துகொண்டு சர்மிஷ்டியை அன்புடன் போஷித்து வந்தான்.

சில நாட்கள் சென்றதும், விருகனுடைய ராஜ்ஜியத்தைப் பகைவர்கள் சதுரங்க சைன்யத்துடன் தாக்கினார்கள். விருகனும் தன் சைன்யத்துடன் பகைவர்களை எதிர்த்துப் போராடினான். ஆனால் போரில் விருகன் மாண்டான். இதை அறிந்த விருகன் பிரஜைகள் "நம் அரசன் சோதிடர்கள் சொன்னதைப் பொருட்படுத்தாமல் விஷ கன்னியைக் காப்பாற்றி இக்கதியை அடைந்தான். ராஜ்ஜியம் இப்பொழுது பகைவர்களால் தாக்கப்பட்டிருக்கின்றது. இவ்விஷ கன்னிகை இங்கு இருந்தால் ராஜ்ஜியத்திற்கு இன்னும் பல கெடுதல்கள் ஏற்படும். ஆகையால் இவளைக் கொல்லுங்கள், விரட்டுங்கள்" என்று ஓலமிட்டனர்.

சர்மிஷ்டியின் காதுகளில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் தன்னை மிகவும் நொந்துகொண்டு அவள் விரைவாகக் காட்டை நோக்கி ஓடினாள்; ஹாடகேசுவரம் என்னும்

புண்ணிய க்ஷேத்திரத்தை காட்டில் பார்த்தாள். அந்த க்ஷேத்திரத்தை அடைந்ததும் தன்னுடைய பூர்வ ஜன்மாவின் வரலாறு அவளது நினைவிற்கு வந்தது.

## இதுவே சர்மிஷ்டையின் பூர்வ ஜன்ம வரலாருகும்:-

சர்மிஷ்டை பூர்வ ஜன்மாவில் ஒரு சண்டாளி. அவள் தன்னுடைய பல குழந்தைகளுடன் பசியால் வருந்தினுள். ஆகாரத்திற்காக அங்குமிங்கும் அலைந்தாள்; ஜலம் கூட கிடைக்கவில்லை. குழக்தைகளும், அவளும் பசியாலும் தாகத்தாலும் மிகவும் பீடிக்கப் பட்டார்கள். கடைசியாகக் குழந்தைகளுடன் அதே ஹாடகேசுவர க்ஷேத்திரத்தை அடைந்தாள். அங்கு ஒரு சிறு கிணற்றில் கொஞ்சம் ஜலம் இருப்பதைப் பார்த்தாள்; சமீபத்தில் தாகத்தினுல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பசுவையும் பார்த்தாள். அக் கிணற்றிலிருந்த சிறிது ஜலத்தைத் தனக்கோ, குழந்தைகளுக்கோ உபயோகப்படுத்தாமல் அப்பசுவிற்கே கொடுத்தாள். அந்த புண்ணியத்தினுல்தான் அவள் அரசனின் புத்திரியாகப் பிறந்தாள்.

அதே ஜன்மாவில் அவள் மற்ருெரு சமயம் ஒரு தேவாலயத்திலிருந்து, தங்கத்தினுல் செய்யப் பட்ட 'கௌரீ' விக்கிரஹத்தைத் திருடி அதை விற்பதற்காகக் கண்டங் கண்டமாக வெட்டினுள். அப் பாபத்தினுல் அவள் விஷ கன்னிகையாகப் பவித்தாள்.

இப்படித் தன் பூர்வ ஜன்மாவின் வரலாற்றை அறிந்துகொண்டு சர்மிஷ்டை அந்த க்ஷேத்திரத்திலிருந்த

அதே கிணற்றை யாவருக்கும் உபயோகப்படும்படியாக நிர்மலமாயும், அதிகமாயும் இருக்கும் ஜலத்தோடு கூடினதாயிருக்கச் செய்தாள். பிறகு அவள் கௌரீ விக்கிரஹம் ஒன்றை அங்கே பிரதிஷ்டை செய்து கௌரீ தேவியையே மனதில் தியானம் செய்துகொண்டு கொடிய தவத்தைச் செய்தாள். இவ்வாறு வெகுகாலம் கழிந்தது. சரீரமும் கிழப்பருவத்தை அடைந்தது.

ஒரு நாள் கௌரீ தேவி இச்சர்மிஷ்டையைப் பரீட்சிப்பதற்காக இந்திராணியின் தோற்றத்துடன் சர்மிஷ்டையின் அருகில் வந்து, "ஏ, பெண்ணே! உன்னுடைய தவத்தினுல் நான் மிகவும் சந்தோஷத்தை அடைந்தேன். நான் மூன்று உலகங்கட்குமதிபதியான தேவேந்திரன் பத்தினியான இந்திராணியாவேன். உனக்கு வேண்டிய வரத்தைக் கேள், தருகிறேன்" என்ருள்.

இவ்வார்த்தைகளைக்கேட்ட சர்மிஷ்டை "நான் உன்னிடத்திலிருந்து வரத்தை விரும்பவில்லை. கௌரீ தேவியைத் தவிர வேறு எந்த தேவதையிடமிருந்தும் எனக்கு வரம் வேண்டாம். கௌரீ தேவி என்னை நரகத்தை அடை என்று கட்டளையிட்டாலும் அக்கட்டளையை ஏற்று நரகத்திற்குச் சந்தோஷமாகச் செல்வேனே தவிர நீ சுவர்க்கத்தைக் கொடுத்தாலும் அது எனக்கு வேண்டாம்" என்று பதிலுரைத்தாள்.

உடனே, இந்திராணி கோபங்கொண்டு "நான் தேவேந்திரனுடைய உயிருக்கு உயிராவேன் என்று நீ அறிவாயாக. என் ஆக்ஞையைத் தேவர்கள், தர்னவர்கள் மற்றும் யாவரும் தலைமேற்கொண்டு ஏற்றுப் பணி செய்

கிறார்கள். அப்படிப்பட்ட என்னிடமிருந்து நீ வரத்தை விரும்பாவிடில் நான் உன்னை இப்பொழுதே வச்சிராயுதத்தால் பொடி செய்வேன்" என்று அதட்டினாள்.

"தேவர்களுக்கெல்லாம் ஆதிபத்தியத்தை நீ வகிக்கிறாய் என்று, நான் நன்கு அறிவேன். எந்தக் கௌரீ தேவியின் அருளினால் இந்த மேன்மையான பதவி உனக்குக் கிடைத்திருக்கிறதோ அந்தத் தேவியை ஆராதித்து என் அபீஷ்டத்தை நிறைவேற்றிக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன். இதனால் உனக்கு நான் கொஞ்சம் கூடக் குற்றம் செய்தவளாக ஆகமாட்டேன். ஆனாலும் என்னை வதம் செய்யத் தகுந்தவளாக நீ எண்ணுகிறாய். நான் சொல்வதை ஆதரவுடன் கேள். நன்றாய் ஆராய்ந்து எது உசிதமோ அதைச் செய். நீயோ, உன்னுடைய பர்த்தாவோ, வேறு எந்தத் தேவனோ, அசுரனோ பராசக்தியைச் சரணமடைந்த என்னைக் கொல்லவே முடியாது. அதனால் சீக்கிரம் உன்னிருப்பிடமான சுவர்க்கத்திற்குப் போ. வீணாகக் கோபங் கொள்ளாதே" என்று சர்மிஷ்டை இந்திராணியிடம் சொல்லிவிட்டு அக்கினியில் விழுந்து பிராணனை விட வேண்டுமென்று எண்ணினாள். உடனே பராசக்தியான கௌரீ தேவி இந்திராணியின் தோற்றத்தை மாற்றிக்கொண்டு தன் சுவரூபத்துடன் தோன்றினாள். கௌரீயின் மங்கள சுவரூபத்தைக்கண்டு சர்மிஷ்டை ஆனந்தக் கடலில் மூழ்கினாள். தேவி சர்மிஷ்டையைத் தன்கையால் தொட்டு அவளை ரூபலாவண்ணியமுடைய யுவதியாக மாற்றி அவளுடைய அபீஷ்டத்தையும் நிறைவேற்றினாள்.

மேற்சொன்ன சரித்திரத்தில் கதாபாத்திரனுன விருகன் சொன்னவாறு ஜபத்தினுலோ மற்றும் எவ்வித கர்மானுஷ்டானத்தாலும் தைவத்தை அதாவது இன்ப துன்பங்களைக் கொடுக்கும் முற்பிறப்பில் செய்யப்பட்ட கர்மாவை நாசஞ் செய்ய முடியாது என்பது உண்மைதான். ஆனுல் இது இங்கு அறியத் தகுந்ததாம். பகவத்பாதாளான ஸ்ரீ ஆதி சங்கராச்சாரியாளவர்கள் "ஸ்ரீலலிதாத்ருசதீ" என்னும் நூலில் 31-வது நாமாவிற்குப் பொருட்கூறுமிடத்தில் "கர்மாக்களை நாசஞ் செய்வதற்குத் திடமான தத்வ ஞானத்தைத் தவிர கர்மாக்களை அனுபவிப்பதுதான் காரணம் என்று சாஸ்திரங்களிலிருந்து தெரிகின்றது" என்னும் அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கின்றுர்கள். அதனுல் முற்பிறப்பிற் செய்த கர்மாக்களை ஜபம் முதலான கர்மாக்களால் நாசஞ் செய்ய முடியாவிடினும் திடமான தத்வ ஞானத்தினுல் நாசஞ் செய்ய முடியுமென்று கொள்ள வேண்டும். தத்வஞானமென்பது நித்தியமாயும், சுயஞ் ஜோதியாயும், சர்வவியாபியாயும், ஆநந்தமாயுமுள்ள பரம்பொருளும் ஜீவர்களாகின்ற நம்முடைய சுவரூபமும் ஒன்றே என்ற உண்மையான அறிவாகும். தன்னை ஜீவன் என்று சொல்லிக்கொள்ளும் நாம் ஒவ்வொருவரும் வாஸ்தவத்தில் முற்கூறிய பரம்பொருளைக் காட்டிலும் வேறில்லை. ஆனுல் கயிற்றின் உண்மையான சுவரூபம் தெரியாததால் கயிற்றில் "இது பாம்பு" என்று பிரமம் (விபரீத தோற்றம்) ஏற்படுகின்றதுபோல பரம்பொருளின் உண்மையான சுவரூபம் தெரியாததால் அப்பரம்பொருளில் "நான் சம்சாரி", "நான் ஜீவன்" என்ற பிரமம் ஏற்படுகின்றது. "நான் சம்சாரி" என்ற இது முதலான பிரமம் நாசத்தை அடைந்தாலொழிய விதியை நாசஞ்செய்ய முடியாது. எவ்வாறு கயிற்றின் உண்மையான சுவரூபத்தின் அறிவு ஏற்பட்டதும்

அவ்வறிவு ஏற்படுவதற்கு முன்னிருந்த கயிற்றின் அறியாமை நிவிருத்தியடைந்து அவ்வறியாமையின் காரியமான பாம்பின் விபரீத தோற்றமும் நிவிருத்தியடைகின்றதோ அது போல பரம்பொருளின் உண்மையான சுவரூபத்தின் அறிவு ஏற்பட்டதும் அவ்வறிவு ஏற்படுவதற்கு முன்னிருந்த பரம்பொருளுடைய சுவரூபத்தின் அறியாமை நிவிருத்தியடைந்து அவ்வறியாமையின் காரியமான "நான் ஜீவன்", "நான் சம்சாரி", "நான் போக்தா" என்ற பிரமங்கள் நாசத்தையடையும். ஆனல் "நான் ஜீவன்", "நான் சம்சாரி", "நான் போக்தா" என்ற இது முதலிய பிரமங்கள் நாசத்தை அடைந்தால் முற்பிறப்பில் செய்யப்பட்ட கர்மாவினல் உண்டாயிருக்கின்ற வியாதி முதலியவை நாசத்தை அடையுமா என்ருல் அதற்குப் பதில் ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகளருளிய "பஞ்சதீ" என்னும் நூலில் சொல்லப்பட்டிருக்கின்றது. அது இங்கு விளக்கமாகச் சொல்லப்படுகின்றது:— பத்துபேர்கள் சேர்ந்து ஒரு ஆற்றில் இறங்கி சிறிது தூரம் சென்றதும் நதியில் பிரவாஹம் வருவதைப் பார்த்தனர். உடனே ஓடி அக்கரையை அடைந்தனர். அக்கரையை அடைந்ததும் ஒவ்வொருவரும் தன்னை எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளாமல் "ஒன்பது பேர்கள் தான் கரையை அடைந்திருக்கின்றனரென்றும் ஒருவரைப் பிரவாஹம் இழுத்துக்கொண்டு போய்விட்டதென்றும்" பிரமித்துத் தலையிலடித்துக்கொண்டு அழ ஆரம்பித்தனர். அச்சமயத்தில் ஒருபெரியவர் அங்கு வந்து சேர்ந்தார். அவர் அவ்வொவ்வொருவரையும் மறுபடியும் எண்ணச் சொன்னர். அவர்கள் முன்போலவே தன்னை எண்ணிக்கையில் சேர்த்துக் கொள்ளாமல் எண்ணும்பொழுது "பத்தாவதாக நீ இருக்கின்ருயே" என்று கூறி ஒவ்வொருவரையும் சுட்டிக் காட்டினர். உடனே அவர்களுக்குப் பத்தாவது மனிதன் க்ஷேம

மாக இருக்கின்றுன் என்று அறிவு ஏற்பட்டது. அந்த அறிவு ஏற்பட்டவுடன் பிரமத்தினுலேற்பட்ட தலேயில் அடித்துக்கொள்ளும் காரியமும் அழுகையும் நிவிருத்தியடைந்தாலும் முன் பிரமமிருக்கும்பொழுது தலேயிலடித்துக் கொண்ட செய்கையினுல் ஏற்பட்ட விரணம் (புண்) உடனே நிவிருத்தியடைகின்றதில்லே. சிறிது காலம் சென்றே நிவிருத்தியடைகின்றது. அது போல தத்வ ஞானத்தை அடைந்தவனுக்கு "நான் போக்தா" என்ற பிரமத்தின் நாசமேற்பட்டவுடன் அவன் அச்சமயம் செய்துகொண்டிருந்த கர்மாக்கள் நிவிருத்தியடைந்தாலும் முன்பு "நான் போக்தா" என்ற பிரமமிருக்கும்பொழுது செய்யப்பட்ட கர்மாவினுல் ஏற்பட்ட வியாதி முதலியவை போகத்தைக் கொடுக்காமல் நாசத்தை அடையாது. தத்வ ஞானம் வந்தவனுடைய அந்த சரீரம் விழும் வரையில் அவை நீடிக்கலாம். அச்சரீரம் விழுந்தவுடன் அவனுடைய கர்மாக்கள் யாவும் நாசத்தை அடைகின்றன. சரீரம் விழும் வரையில் வியாதி முதலியவை தத்வ ஞானிக்கு துன்பத்தைக் கொடுக்குமா என்றுல் துன்பத்தைக் கொடுக்காது என்றே சொல்லலாம். பத்தாவது மனிதன் க்ஷேமமாக இருக்கிறுன் என்ற மகிழ்ச்சியில் எவ்வாறு தலேயிலடித்துக் கொண்டதாலேற்பட்ட விரணத்தின் துக்கானுபவம் மறைந்து இருக்குமோ அது போல தத்வ ஞானத்தாலேற்பட்ட பிரம்ஹாநந்தத்தில் முற் பிறவியில் செய்யப்பட்ட கர்மாவின் பலனுன வியாதி முதலியவற்றின் துக்கானுபவமும் மறைந்து இருக்கும். ஆகையால் தைவத்தை வென்று துக்கத்தை அனுபவிக்காமலிருக்க விரும்புபவன் திடமான தத்வ ஞானத்தைச் சம்பாதிக்கவேண்டும்.

இங்கு ஜபம், தானம் முதலிய கர்மாக்களால் தைவத்தை அதாவது விதியை நாசஞ் செய்ய முடியா

விடினும் திடமான தத்வ ஞானத்தால் நாசஞ் செய்ய முடியும் என்று சொல்லப்பட்டது. இதிலிருந்து ஜபம், தானம் முதலிய கர்மாக்களினுல் விதியை அனுபவிக்காமலிருக்கும்படி செய்து கொள்வது சாத்தியமில்லை என்ற முடிவிற்கு ஒருவர் வரலாம். ஆனுல் விதியை ஜபம் முதலிய கர்மாக்களினுல் நாசஞ் செய்ய முடியாவிட்டாலும் அதை கர்மாக்களால் அனுபவிக்காமலிருக்கும்படி செய்து கொள்ளலாமென்று பின் வரும் பக்கங்களிலிருந்து அறியலாம்.

## இரண்டாவது சரித்திரம்.

பகவத்பாதாளான ஸ்ரீ ஆதிசங்கராச்சாரியாள் "பகந்தரம்" என்னும் மிகக்கொடிய வியாதியினுல் பீடிக்கப்பட்டார்கள். உடனே சிஷ்யர்கள் ஸ்ரீ மதாச்சாரியாளை அவ்வியாதிக்குத் தகுந்த சிகித்சையைச் செய்துகொள்ளும்படி பிரார்த்தித்தார்கள். அதற்கு "நான் முற் பிறப்பில் செய்த கர்மாவின் பலனுன இந்த ரோகத்தை அனுபவிக்காவிடில் அக் கர்மா, மற்ருெரு ஜன்மாவைக் கொடுத்து இதே வியாதியை அனுபவிக்கும்படி செய்யும். இது சாஸ்திரங்களின் தாத்பர்யம். வியாதி என்பது முற்பிறவிகளில் செய்யப்பட்ட கர்மாவினுலோ இப்பிறப்பில் ஏற்பட்ட தாதுவைஷம்மியத்தாலோ ஏற்படக்கூடியது. தாதுவைஷம்மியத்தால் ஏற்பட்ட வியாதியை சிகித்சையினுல் நாசம் செய்ய முடியும். கர்மாவினுலேற்பட்ட வியாதியை அனுபவித்தேதான் நாசம் செய்யவெண்டும். ஆகையால் இவ்வியாதிக்கு நான் சிகித்சை செய்துகொள்ளப்போவதில்லை" என்று பகவத்பாதாள் பதிலளித்தார்கள்.

"ஜலத்தில் வாழும் பிராணிகளுக்கு ஜலம் ஆதாரமா யிருப்பதுபோல நீங்கள் எங்களுடைய வாழ்விற்கு இன்றி யமையாதவர்களாக இருக்கிறீர்கள். ஆகையால் தங்க ளுடைய சரீரத்தை எங்கள் பொருட்டாகவாவது சிகித்சை செய்து காப்பாற்ற வேண்டு" மென்று ஸ்ரீ ஆச்சாரியாளைச் சிஷ்யர்கள் மறுபடியும் வேண்டினார்கள். இதைக் கேட்டு மிகவும் கருணையுள்ள ஸ்ரீ ஆச்சாரியாள் சிகித்சையைச் செய்துகொள்ளச் சம்மதித்தார்கள். எவ்வளவோ வைத் தியங்கள் செய்தும் வியாதி குணமாகவில்லை. பின்பு இந்த வியாதி ஏவலினால் (ஆபிசாரப் பிரயோகத்தினால்) உண்டான தென்று தெரிய வந்ததும் பகவத்பாதாளின் சிஷ்யரான "பத்மபாதாள்" தன் மந்திர பலத்தினால் வியாதியை குண மாகும்படி செய்தார்கள்.

இக்கதையானது ஸ்ரீ வித்தியாரண்ய சுவாமிகள் அரு ளிய "சங்கர விஜயம்" என்னும் நூலில் சொல்லப்பட்டிருக் கின்றது. இக் கதையில் "பரிஹாரங்களைச் செய்து முற் பிறப்பில் செய்யப்பட்ட கர்மாவின் பலனைத் தன்னிடமணு காமலிருக்கும்படி தடுத்தாலும், முற்பிறப்பில் செய்யப் பட்ட அக்கர்மா, மற்றொரு ஜன்மாவைக் கொடுத்துப் பலனை அனுபவிக்கும்படி செய்யும்" என்ற ஸ்ரீ சங்கராச்சாரியா ளின் தீர்ந்த அபிப்பிராயம் அறியப்படுகின்றது.

இந்த அவர்களுடைய அபிப்பிராயத்திலிருந்து தை வத்தை பௌருஷத்தினால் அதாவது இப்பிறப்பில் செய்யப் பட்ட கர்மாவினால் நாசம் செய்ய முடியாவிடினும் அதன் பலனை இப்பிறப்பில் தன்னிடமணுகாமலிருக்கும்படி தடுத்துக் கொள்ளலாமென்றும், ஆனால் அடுத்த ஜன்மாவில் அதே பின்தொடரும் என்றும் தெரிய வருகிறது.

## மூன்ருவது சரித்திரம்.

ஒரு நாள் ஆதிபகவத்பாதாளான ஸ்ரீ சங்கராச்சாரியாள் பிரும்மச்சரிய ஆசிரமத்திலிருக்கும்பொழுது பிக்ஷைக்காக ஒரு அந்தணருடைய வீட்டில் நுழைந்தார்கள். அந்தணரின் மனைவி சிறந்த பிரும்மச்சாரியான ஸ்ரீ சங்கரருக்குச் சிறிது அன்னம் கூட அளிப்பதற்குத் தனக்குச் சக்தியில்லாததைப் பற்றி மிகவும் தன்னை நொந்துகொண்டாள். தன்னுடைய ஏழ்மை நிலையை எளிய குரலில் சொல்லிக்கொண்டு ஒரு நெல்லிக்கனியை ஸ்ரீ சங்கரருக்குச் சமர்ப்பித்தாள்.

ஸ்ரீ சங்கரர் அந்த ஸ்திரீயினிடத்தில் கருணைகொண்டு அவ்வீட்டு அந்தணரின் தாரித்திரியத்தை அகற்ற ஸ்ரீ தேவியைக் குறித்து ஸ்தோத்திரம் செய்தார். ஸ்ரீ தேவியும் உடனே ஸ்ரீ சங்கரர்முன் தோன்றி அவரை நோக்கி "இந்த கிருஹத்திலுள்ள அந்தணரும் அவருடைய பத்தினியும் தாரித்திரியம் நிவிர்த்தியாகும்படி ஒரு நற்செய்கையையும் முற்பிறப்பில் செய்யவில்லை. அதனுல் எவ்வாறு இப்பொழுது என் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாவார்கள்?" என்று கேட்டாள்.

ஸ்ரீ தேவியின் வார்த்தைகளைக் கேட்டு "இவர்கள் பூர்வ ஜன்மாவில் தாரித்திரிய நிவிர்த்தியைச் செய்யக்கூடிய சுபகர்மா எதுவும் செய்யவில்லை என்ருலும், இப்பொழுது என்னுடைய கையில் இந்த நெல்லிக்கனியைச் சமர்ப்பித்திருக்கிருர்கள். நான் தங்களுடைய கருணைக்குப் பாத்திரமாக இருந்தால் இந்த நெல்லிக் கனியின் தானத்தின் பலனை அவர்

களுக்குக் கொடுக்கும்படி பிரார்த்திக்கிறேன்" என்று ஸ்ரீ சங்கரர் சொன்னார்.

ஸ்ரீ சங்கரர் கூறிய இந்த இனிமையான வார்த்தையினால் மிகவும் சந்தோஷம் அடைந்த ஸ்ரீ தேவி சுவர்ண நெல்லிக் கனிகளால் அவ்வீடு முழுவதையும் நிரப்பினாள்.

இக் கதையிலிருந்து சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட தானம் முதலான நற்செய்கைகளைச் செய்து ஈசுவரனை ஆராதித்தால், அவர் நம்முடைய முற்பிறவிகளில் செய்யப்பட்ட பாப கர்மாவின் பலனான தாரித்திரியம் முதலானவைகள் நம்மை அணுகாமலிருக்கும்படி செய்து சௌக்கியத்தைக் கொடுப்பார் என்று தெரிகிறது. ஆனால் முற்கூறியபடி, தாரித்திரியமாக உருவெடுத்திருக்கும் அந்த அந்தணரின் முற்பிறப்பிலுள்ள கர்மா பூர்ணமான பலனைக் கொடுக்காமல் நாசத்யைடையாது மறு பிறப்பில் அது பின் தொடரலாம்.

எனவே, ஈசுவரன் தன்னைப் பூஜிக்கின்றவனுடைய தாரித்திரியம் முதலான பாப கர்மாவின் பலன்களை நாசம் செய்வதற்குரிய உரிமையைத்தான் எடுத்துக் கொள்ளாவிட்டாலும் அவைகளை ஒத்திப் போடவோ, முன்பாக ஏற்படச் செய்யவோ சுதந்திரத்தைத் தன்னிடமே வைத்துக் கொண்டிருக்கிறார் என்று அறிய வேண்டியதாயிருக்கின்றது.

புராணங்களில் இதைத் தெரிவிக்கக்கூடிய கதைகள் பல இருக்கின்றன. உதாரணமாக:—

ஒரு அரசன் அந்தணர் ஒருவருக்கு ஒருவிலையுயர்ந்த பசுவை தானம் செய்தார். அந்த பசு அந்தணரிடமிருந்து ஓடி மறுபடியும் அரசனுடைய ஆயிரக்கணக்கான பசுக்களுடன் கலந்து கொண்டது. இதை அரசன் அறியாமல் அதே பசுவை மற்றொரு அந்தணருக்கு தானம் செய்தான். அந்தணர் இருவர்களும் "இது என்னுடைய பசு. அரசர் எனக்கு தானம் கொடுத்த பசு. அதனால் இதை என்னிடம் விட்டுவிடு" என்று சண்டையிட்டனர்! இருவரும் அரசனிடம் தங்களுடைய விவஹாரத்தை அறிவித்து அரசனுடைய தீர்ப்பைக்கேட்க அரண்மனையின் வாயிலில் வந்தும் உறக்க சண்டை போட்டுக்கொண்டிருந்தனர். அவ்விருவர்களுடைய சண்டையைக் கேட்டு அரசர் வெளியில் வராததைக் கண்டு அவ்விருவர்களும் அரசனுக்குச் சாபத்தைக் கொடுத்தார்கள். அரசன் சிறிது காலஞ்சென்று மாணமடைந்தான். யமதர்மராஜாவானவர் அரசனிடம் 'நீ சாபத்தின் பலனை முதலில் அடைகின்றாயா? அல்லது உன்னுடைய புண்ணிய கூட்டங்களின் பலனை முதலில் அடைகின்றாயா' என்று கேட்டார். அரசன் சாப பலனை அனுபவித்துவிட்டு புண்ணிய பலன்களை அனுபவிக்கின்றேன் என்று பதிலளித்தான். அதன்படி அரசன் முதலில் துக்கத்தை அடைந்து பிறகு சௌக்கியத்தை அடைந்தான். இக் கதையிலிருந்து பாப கர்மாவின் பலனையோ புண்ணிய கர்மாவின் பலனையோ ஒத்திப் போடவோ முன்பாகச் செய்யவோ சாத்தியமென்று அறியப்படுகின்றது.

ஒருவன் மேன்மையான தானம் முதலிய தர்மங்களை மேன்மேலும் இடைவிடாது செய்தானானல் அதற்குத் தகுந்தபடி முற்பிறப்பில் செய்த பாபத்தினுடைய பலன் வெகுகாலம் வரைத் தன்னைப் பாதிக்காமலிருக்கும்படி

செய்து கொள்ளலாம். கர்மாக்களை வேருடன் நாசம் செய்ய வேண்டுமானால் திடமான ஞானத்தைச் சம்பாதிக்க வேண்டும். வேறு கதி இல்லை.

ஏஷஹ்யேவ சாதுகர்ம .... .... .... .... என்ற சுருதி, ஜீவனை நல்ல காரியத்திலோ, கெட்ட காரியத்திலோ ஈசுவரன் ஏவுகின்றான் என்று கூறுகின்றது. அவ்வாறிருக்க நமக்குக் கர்மாவைச் செய்ய ஏது சுதந்திரம்? ஆண்டவன் ஆட்டியபடிதான் ஆடவேண்டியிருக்கும் என்று ஒருவர் சந்தேகிக்கக்கூடும்.

ஆனால் "ஈசுவரன் முற்பிறப்பில் ஜீவன் செய்த கர்மாவை அனுசரித்துத்தான் அவனை நல்ல காரியத்திலும் கெட்ட காரியத்திலும் ஏவுகின்றான்". என்பதுதான் அச் சுருதிக்குப் பொருள். அவ்வாறு பொருள் கொள்ளாவிடில் (1) ஈசுவரன் ஒருவனை நல்ல காரியத்திலும், மற்றொருவனைக் கெட்ட காரியத்திலும், தூண்டுவதன் மூலமாக அவன்மீது பக்ஷபாததோஷத்தை நாம் சுமத்த நேரிடும். இராகத்வேஷமில்லாத ஈசுவரனுக்குப் பக்ஷபாததோஷம் ஏது? (2) விதி நிஷேதங்களைக் கூறும் சுருதிகளுக்கு அர்த்தமின்மையைக் கூறினதாக ஆகும். (3) கர்மாக்களைச் செய்ய ஜீவனுக்குச் சுதந்திரத்தைக் கூறும் சுருதிகளும் பல இருக்கின்றன என்பதை மறந்ததாக ஆகும்.

இது வரையில் கூறப்பட்டதிலிருந்து தர்மங்களைச் செய்து பாபத்தின் பலன்கள் தன்னை அணுகாமலிருக்கும்படி செய்துகொள்ள ஓரளவு சாத்தியந்தான் என்று நன்கு அறியப்பட்டது.

இங்கு, கர்மாவின் பலனைக் கர்மாவினுல் ஒத்திப் போட்டதனுல் என்ன லாபம் இருக்கின்றது? இன்று இல்லாவிட்டால் என்ருவது அதை அனுபவிக்கத்தானே வேண்டும் என்று ஒருவர் அஸ்வாரஸ்யத்தையடையலாம். ஆனுல் அது தவறு. ஒரு ஜன்மாவில் செய்யப்பட்ட கர்மா அல்லவா மறு ஜன்மாவில் "விதி" என்று அழைக்கப்படு கின்றது. ஆகையால் இந்த ஜன்மாவில் செய்யப்பட்ட புண்ணிய கர்மாக்கள் மறு ஜன்மாவில் விதியாக ஸம்பவித்து இன்பத்தைத் தரக்கூடிய பொருளாகப்பவிக்கும். சர்வேசு வரனுடைய இச்சை இருந்தால் புண்ணிய கர்மாவின் பலன் கள் பக்தனுக்கு உசித காலத்தில் ஏற்படும். சர்வேசுவரர் கர்மாக்களின் பலன்களை அவைகள் ஏற்படும் காலத்திலிருந்து முன்போ, பின்போ ஏற்படும்படி செய்ய தனக்கு சுதந்திரத்தை வைத்துக் கொண்டிருக்கின்ருர் அல்லவா? அதனுல் ஒருவன் முன்செய்யப்பட்ட பாப கர் மாவால் ஏற்பட்ட வியாதி முதலியவற்றை தற்சமயம் பரி ஹாரத்தால் ஒத்திப் போடுவதுடன் மேன்மேலும் தானம் முதலிய நற்செய்கைகளையே செய்துகொண்டு வந்தால் சர் வேசுவரருடைய பிரசாதத்தால் அந்த நற்செய்கைகள் விதி ரூபமாக இருந்துகொண்டு, மறு ஜன்மாவில் தொடரும் வியாதி முதலியவை அவனை அதிகமாகப் பாதிக்காமல் இருக்கும்படி உதவும். உதாரணமாக:—

ராமன் என்பவனுக்கும் கிருஷ்ணன் என்பவனுக்கும் முற் பிறவியில் செய்யப்பட்ட பாப கர்மாவினுல் சர்ம ரோகம் ஏற்பட்டது. இருவரும் பரிஹாரம் செய்து கொண்டு அந்த ரோகத்திலிருந்து நிவிருத்தியடைந்தனர். ராமன் என்பவன் ரோகம் நிவிருத்தியானதும் லௌகீக பிர வர்த்தியிலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தான். கிருஷ்ணன்

என்பவன் பரிஹாரஞ் செய்து ரோகம் நிவிருத்தியானதும் மேன்மேலும் தானம் முதலிய நற்செய்கைகளையே செய்து கொண்டு வந்தான். மறு பிறப்பில் அவ்விருவரையும் அதே சர்மரோகம் பீடிக்க ஆரம்பித்தது. கர்மா தன்னுடைய பலனைக் கொடுக்காமல் நாசமடையாதல்லவா? ராமன் முற் பிறவியில் புண்ணிய கர்மாக்கள் செய்யாததால் உடல் முழுவதும் சிறங்குகள் உண்டாகி சிறங்குகளில் மொய்க்கும் ஈக்களைத் தன் கைகளால் விரட்டமுடியாமல் மிகவும் கஷ்டப் பட்டான். ஆனால் கிருஷ்ணன் அவ்வியாதியை அடைந்தும் புத்திரர்களாலும், மனைவியாலும் நன்கு சிகித்சை செய்யப்பட்டு ராமனைப்போல் கஷ்டப்படவில்லை. ஏனென்றால் கிருஷ்ணன் பூர்வஜன்மாவில் நற்செய்கைகளையேசெய்து சர்வேசுவரனுடைய பிரசாதத்திற்குப் பாத்திரனானன். சர்வேசுவரர் தன்னுடைய பக்தன் கஷ்டத்தை அனுபவிக்காமல் இருப்பதற்காக அவன் முற் பிறவியில் செய்த நற் செய்கைகளுக்கு உசித காலத்தில் பலன்களைக் கொடுத்துக் காப்பாற்றினர்.

எனவே கர்மாவால் விதியை நாசஞ் செய்ய முடியாது என்று ஒப்புக்கொள்ளும் இரண்டாவது சித்தாந்தத்திலும் கர்மாவின் பலனை அனுபவிக்காமலிருக்கும்படி செய்துகொள்ள ஓரளவு சாத்தியந்தான் என்று ஒப்புக் கொள்ளப்படவில்லை என்ற எண்ணம் வேண்டாம். வியாதியைப் பரிஹாரஞ்செய்து அனுபவிக்காமலிருக்கும்படி செய்துகொள்ள முடியும் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பதாகவே எண்ணவேண்டும். ஆனால் நித்ய கர்மானுஷ்டானஞ் செய்யாமல் எவ்வளவு தர்மங்களைச் செய்தாலும் ஈசுவரனுடைய பிரசாதத்தைப் பெறமுடியாது. மேலும் நித்ய கர்மானுஷ்டானமானது சித்தசுத்தியை உண்டுபண்ணி

முற்பிறவியில் செய்யப்பட்ட பாபகர்மாவின் பலன்களான வியாதி முதலியவற்றைச் சகித்துக்கொள்ள சித்தத்தில் தைர்யத்தையும் கொடுக்கும். தத்வ ஞானத்தை அடைவதற்கு உண்டான விடா முயற்சியையும் உண்டுபண்ணும். அதனால் தான் நித்ய கர்மானுஷ்டானம் மிகவும் முக்கியமானது என்று கருதப்படுகின்றது.

பௌருஷம் என்பது (1) உச்சாஸ்திரம் (2) சாஸ்திரிதம் என இரு வகைப்படும். பரஸ்திரீ முதலிய விஷயங்களின் போகத்தை உத்தேசித்துச் செய்யப்பட்ட கர்மா உச்சாஸ்திரமாகும். இது நரகம் முதலான அனர்த்தத்திற்குக் காரணமாகும்.

சாஸ்திரதமென்பது நித்திய நைமித்திக கர்மானுஷ்டானமாகும். இது சுவர்க்கம் முதற்கொண்டு மோக்ஷ பரியந்தமுள்ள சுகத்திற்குக் காரணமாகும். மேற்சொன்னவாறு சித்தசுத்தியைக் கொடுக்கும். சாஸ்திரதத்தை விடா முயற்சியுடன் ஒருவன் செய்துவந்தால் அச் சாஸ்திரிதம் முற்கூறிய பலன்களைத் தருவதுடன், மேன்மேலும் சிரேயசுக்குக் காரணமான ஸத்வாசனையைக் கொடுக்கவும் செய்கிறது. இந்த ஸத்வாசனையைப் "பூர்வப்பிரக்ஞை" என்றும் சொல்லுவார்கள். பூர்வப் பிரக்ஞை என்பது அந்தக்கரண விர்த்தியின் ஸம்ஸ்காரம். இது அடிக்கடி செய்யப்பட்ட கர்மாவினாலும் கர்ம பலனின் போகத்தாலும் ஏற்படுகின்றது.

# பூர்வப் பிரக்ஞை அல்லது அந்தக்கரண விர்த்தியின் ஸம்ஸ்காரத்திற்குத் திருஷ்டாந்தம்.

(1) ஒருவன் புண்ணிய க்ஷேத்திரம் ஒன்றை அடைந்து அந்த க்ஷேத்திரத்திலிருந்து வெகு தூரத்தில் இருக்கும் மஹாநதியில் தினந்தோறும் நீராட வேண்டுமென் றெண்ணி அந்த நதிக்குப் போவதன் மார்க்கத்தை விசாரித்து, எங்கெங்கு எத்திசை வழியாகச் செல்ல வேண்டு மென்று மிகச் சிரமத்துடன் கவனத்தைச் செலுத்திச் சில தினங்கள் நதிக்குப் போய் வருகிறுன். மார்க்கத்தின் பரிசயம் (பழக்கம்) ஏற்படயேற்பட அவனுக்கு முன்போல மார்க்கத்தில் அதிகக் கவனத்தைச் செலுத்தவேண்டிய அவசியம் ஏற்படுகிறதில்லை. அவனுடைய கால்களே அவனை நதிக்கு இழுத்துக்கொண்டு போகின்றன. அதாவது அவன் ஆற்றிற்குப் போகவேண்டுமென்ற எண்ணத்துடன் வீட்டைவிட்டுப் புறப்படவே, சில தினங்களாக அப்பியசிக்கப்பட்ட கர்மாவினுல் உண்டான மார்க்கத்தின் அறிவு (அந்தக்கரணவிருத்தி) மனதில் சூக்ஷ்மமாக இருந்து கொண்டு கால்களை ஆற்றையடையும்படி செய்கின்றது. இந்த சூக்ஷ்மமான அந்தக்கரண விர்த்தியை "அந்தக்கரண விர்த்தியின் ஸம்ஸ்காரம்" அல்லது "பூர்வப் பிரக்ஞை" என்று கூறுகின்றனர். இது அடிக்கடி செய்யப்படுகின்ற கர்மாவினுல் ஏற்பட்ட வாசனையாகும்.

(2) அநேக சிஷ்யர்கள் ஒரு பாடசாலையில் ஒரு குருவினிடம் கல்வியைக் கற்று வருகின்றனர். அங்கு ஒவ்வொரு சிஷ்யனுக்கும் உட்காருவதற்கு ஒரு இருப்பிடம் கொடுக்கப்படுகின்றது. வெகுகாலம் குறிப்பிட்ட இடத்தில் உட்கார்ந்து அனுபவத்தையடைந்த ஒரு சிஷ்யனை மற்றொரு

இடத்திற்குப் போகச் சொன்னல் அவன் கஷ்டப்படுகின்ருன். முன்னிருந்த இடத்தில்தான் அவனுக்குப் பிரியம் இருக்கின்றது. இந்தப் பிரியம் அல்லது ருசிக்குப் பல நாட்களின் பரிசயத்தினுல் ஏற்பட்ட அக்குறிப்பிட்ட இடத்தின் போகம் மனதில் சூக்ஷ்மமாக இருப்பதுதான் காரணமாகும். அவ்வாறு சூக்ஷ்ம நிலையிலிருக்கும் போகத்தைப் "பூர்வப் பிரக்ஞை" அல்லது "அந்தக்கரணவிர்த்தியின் ஸம்ஸ்காரம்" என்று கூறுகின்றனர். இது கர்மாவினுடைய பலஞன ஒரு குறிப்பிட்ட இருப்பிடத்தின் போகத்தினுல் ஏற்பட்ட வாசனையாகும்.

(3) ஒருவன் பல நாட்களாக அரிசி—அன்னத்தைச் சாப்பிட்டுக்கொண்டு வருகின்ருன். எனவே, அரிசி—அன்னத்திலுள்ள சுவையில் பழக்கம் ஏற்பட்டிருப்பதால் அச்சுவையில்தான் அவனுக்கு அதிகமாகப் பிரியம் உண்டாகின்றது. கோதும்பை—அன்னத்தின் சுவையில் அவ்வளவு பிரியம் ஏற்படுகின்றதில்லை. அரிசி அன்னத்தின் சுவையிலுண்டான பிரியத்திற்குப் பல நாட்களாக ஏற்பட்ட அச்சுவையின் போகத்தால் ஏற்பட்ட வாசனையே காரணமாகும். இந்த வாசனையும் கர்மாவின் பலனுடைய போகத்தினுல் ஏற்பட்டதுதான்.

ஒருவர் இப்பிறப்பில் விபூதி, ருத்திராக்ஷம் அணிந்துகொண்டு பல வருஷங்கள் சிவலிங்கத்தைப் பூஜை செய்துகொண்டு வந்தால், வாசனையினுல் மறு பிறப்பில் விபூதி ருத்திராக்ஷங்களை அணிந்துகொள்ள அதிகமாக ருசி ஏற்படும். அவைகளைப் பார்த்தாலே அவருக்கு ஆனந்தம் உண்டாகும். சிவலிங்கத்தைப் பூஜை செய்வதிலும் மிக உற்சாகத்துடன் முயற்சிப்பர். பூஜை செய்து அப்பியசித்திருப்பதால் பூஜை செய்யும் முறையும் சீக்கிரத்தில் அறியப்படக்கூடும்.

## நான்காவது சரித்திரம்.

முன்னொரு காலத்தில் கலசன் என்ற பெயருள்ள ஒரு அரசன் இருந்தான். ஒரு நாள் துர்வாச முனிவர் சாதுர்மாஸ்யமென்ற ஒரு விரதத்தை முடித்துவிட்டு அரசனின் வீட்டிற்கு வந்தார். அரசனை கலசன் அவரைக் கண்டதும் சாஷ்டாங்கமாக நமஸ்காரஞ் செய்து பயபக்தியுடன் உபசரித்து அம் முனிவருடைய அபீஷ்டத்தைச் செய்ய தான் காத்துக்கொண்டிருப்பதையும் தெரிவித்தான். அதைக்கேட்டு முனிவர் மிகவும் சந்தோஷமடைந்து, "இன்று சாதுர்மாஸ்ய விரதம் சமாப்தி அடைகின்றது. பாரணை செய்வதற்காக இங்கு வந்திருக்கிறேன். அன்னம் சுஸ்யாதிகள் ஒன்றும் புதிதாகத் தயார் செய்ய வேண்டாம். சித்தமாக இருப்பதையே எனக்கு அளி. அதுவே போதும்" என்று சொன்னார். இதைக் கேட்டதும் அரசன் தன் கிருஹத்தில் அச்சமயம் சித்தமாயிருந்த சுவையுள்ள காய்கறிகளுடனும், மாமிசங்களுடனும் அன்னத்தை பக்தியுடன் அளித்தான். முனிவரும் பசியுடனிருந்ததால் ருசிகூட பார்க்காமல் சிறிது சாப்பிட்டார். பசி தீர்ந்ததும் மாமிசத்தின் சுவையை அறியலானார். உடனே கோபங்கொண்டு "நீ மாமிசத்தையளித்து என்னுடைய விரதத்திற்குப் பங்கம் செய்துவிட்டாய். ஆகையால் நீ கடுவாயாகப் போகக் கடவாய்" என்று அரசனைச் சபித்தார். இதைக் கேட்டு மிகவும் பயமடைந்த அரசன் "தாங்கள் சித்தமான பதார்த்தங்களை அளிக்கக் கட்டளையிட்டீர்கள். அக்கட்டளையைத் தானே நான் செய்திருக்கின்றேன். என்னிடத்தில் ஒரு தவறுமில்லையே. தயவு செய்து சீக்கிரம் உங்களுடைய பக்தனை என்னை அனுக்ரஹியுங்கள்" என்று முறையிட்

டான். அதற்குத் துர்வாச முனிவர் "விரதங்களில் மாமிசத்தைப் புசிக்கக் கூடாது. அப்படியின்றி மாமிசத்தைச் சாப்பிட்டால் விரதம் வீணுகப் போய்விடும். என்னுடைய சாதுர்மாஸ்ய விரதம் இந்த மாமிச போஜனத்தினுல் வீணுகி விட்டது என்று எண்ணம் மனதில் வந்ததும் கோபத்தினுல் சபித்துவிட்டேன்" என்ருர். அதைக் கேட்ட கலசன் "நிரபராதியாயும் உங்களுடைய பக்தனுயும் உள்ள எனக்கு சாப விமோசனத்தைச் செய்யுங்கள்" என்று முனிவரைப் பிரார்த்தித்தான். "நீ வெகு காலம் கடுவாயாக இருப்பாய். பிறகு சிவலிங்கத்தின் தரிசினத்தால் உனக்குச் சாப விமோசனம் ஏற்படும்" என்று கூறினுர்.

உடனே கலசன் கடுவாயாக மாறி ஒரு காட்டை யடைந்து அங்குள்ள பிராணிகளை ஹிம்சை செய்து கொண்டிருந்தான். இவ்வாறு வெகு காலஞ் சென்றதும் நந்தினி என்ற ஒரு பசு அந்தக் கடுவாயிருக்கும் காட்டிற்குப் புல் மேய்வதற்காக வந்தது. அந்தப்பசு அங்கு ஒரு சிவலிங்கத்தைக் கண்டது. அந்த லிங்கத்தைத் தன் மடுவின் பாலினுல் அபிஷேகம் செய்துவிட்டு அங்கேயே மேய்ந்துகொண்டிருந்தது. அப்பசுயிருந்த இடத்திற்கு அக்கடுவாயும் வந்தது. பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமான தோற்றத்துடனிருக்கும் கடுவாயின் பார்வை நந்தினியின்மேல் விழுந்தது. நந்தினியும் கடுவாயைக்கண்டு மிகவும் நடுங்கிக் கொண்டு "பால்குடி மாருத என் கன்று கோகுலத்தில் கட்டப்பட்டிருக்கின்றது. நான் அதை அடையவேண்டும். சிவலிங்கத்தைக் கண்டதும் உண்மையான பக்தியினுல் அந்த லிங்கத்தின் அபிஷேகத்தை உத்தேசித்து குழந்தையையும் விட்டுவிட்டு இங்கு வந்தேன். அந்த பக்தி என் குழந்தையுடன் நான் சேரக்காரணமாகவே ஆகும்" என்று எளிய

குரலில் கூறிற்று. இதைக்கேட்ட கடுவாய் நந்தினியை நோக்கிப் பின்வருமாறு சொல்லிற்று.

கடுவாய்.— ஏன் வீணகப் புலம்புகின்ருய்? என்னிடத்திலிருந்து உன்னுல் தப்பவே முடியாது. எனவே, மரணத்திற்கு முன் உன் இஷ்ட தேவையைத் தியானம் செய்துகொள்.

நந்தினி:— என்னுடைய பிராணன் போகப் போகின்றதே என்று எனக்குப் பயமில்லை. சிவபூஜை செய்தவுடன் எனக்கு ஏற்படும் மரணம் நன்மையையே செய்யும். கோகுலத்தில் கட்டப்பட்டிருக்கின்ற என் குழந்தை என்னை ஆவலுடன் இப்பொழுது எதிர்பார்த்துக்கொண்டிருக்கும். நான் இப்பொழுது அங்குபோகாவிடில் அது பாலில்லாமல் பசியால் மிகவும் கஷ்டப்படும் என்பதை நினைத்துத்தான் நான் வருந்துகிறேன். என் பிராணனின் வியோகத்தை நினைத்து இல்லை. இப்பொழுது நீ என்னை விடு. ஓடிப்போய் குழந்தைக்குப் பாலைக்கொடுத்து என் உற்ருர், உறவினரிடம் அதை ஒப்படைத்துவிட்டுச் சீக்ரம் உன்னிடம் வந்து சேருகின்றேன்.

கடுவாய்:— உன்னை என்னிடத்திலிருந்து மீளவிட மாட்டேன். வீணகப் புலம்பாதே. யமனுடைய வாயில் அகப்பட்ட பின்பும் விடுதலையடைய முயற்சிக்கின்ருய். ஆகையால் உன்னை இப்பொழுதே சாப்பிடுகின்றேன்.

நந்தினி:— நான் உன்னிடம் கட்டாயமாகத் திரும்ப வருவேன். வராவிட்டால் பிரும்மஹத்தியின் பாபம் என்னைச் சேரட்டும். தாயார், தகப்பனுர்களை வஞ்சித்த பாபம் என்னையடையட்டும். கோள் சொல்வதால் உண்டான பாபம் என்னைச் சேரட்டும்.

கடுவாய் அச்சபதங்களைக் கேட்டுக் குழந்தையை உற்றார், உறவினரிடத்தில் ஒப்படைத்துவிட்டு சீக்கிரம் தன்னிடம் திரும்பிவர நந்தினிக்குக் கட்டளையிட்டது.

உடனே, நந்தினி கோகுலத்தையடைந்து சப்த மிட்டுக்கொண்டு கன்றின் பக்கம் ஆவலுடனும், தைன்யத் துடனும் வந்தது. கன்று தாயாரின் முகவாட்டத்தைப் பார்த்து பரபரப்புடன் கேட்டது.

கன்று:— அம்மா. ஏன் உன் முகம் கண்ணீரால் நனைந்திருக்கின்றது? ஏன் உன் முகம் வாடியிருக்கின்றது? சீக்கிரம் சொல்லு.

நந்தினி:— குழந்தாய். நீ முதலில் பாலை திருப்தி யாகக் குடி. பிறகு காட்டில் நடந்ததைச் சொல்லு கின்றேன்.

எனவே, கன்று பாலை சீக்கிரம் குடித்துவிட்டு தன்னை வாத்சல்யத்துடன் உச்சிமுகர்ந்து கொண்டிருக்கும் தன் தாயிடம் விரைவாகக் கேட்டது.

கன்று:— காட்டில் என்ன நடந்தது? அம்மா, சீக்கிரம் சொல்லு.

நந்தினி:— காட்டில் என்னை ஒரு கடுவாய் கொல்ல வந்தது. உன்னைப் பார்த்துவிட்டு திரும்பி வருவதாகக் கடு வாயிடம் அநேக சபதங்களைக்கூறி நான் வேண்டிக் கொண் டதன்பேரில் அது என்னை விட்டது. நான் உன்னைப் பார்த்துப் பேசியாகிவிட்டது. இனி நான் கடுவாயிடம் செல்ல வேண்டியதுதான்.

கன்று:— நானும் அங்கே வருகின்றேன். தாயாரின் சமீபத்தில் மரணமடைவது மிகவும் சிலாக்கியமே. நீ இல்லாமல் நான் எப்படியும் பாலில்லாமையினுல் மரணத்தை யடையத்தானே வேண்டும். உன்னுடன் கூடவே நானும் மரணத்தையடைந்தால் தாயாரிடம் பக்தியுள்ளவர்களுக்கு யாதொரு மேலான கதியுண்டோ அது எனக்கும் உண்டாகும். அல்லது, உன்னுடைய சபதங்களெல்லாம் என்னுடையதாகவே இருக்கட்டும். நீ இங்கு கோகுலத்திலிரு. பால் குடித்து வளரும் குழந்தைகளுக்கு தாய்க்குச் சமான மான பந்து கிடையாது. தாய்தான் தெய்வம். எல்லாம் தாய்தான். என் பிராணனைக் கொடுத்து உன்னை ரக்ஷிக்கின்றேன்.

நந்தினி:— ஏ, குழந்தாய். இன்று மரணம் எனக்குத்தான் விதிக்கப்பட்டிருக்கின்றது. எனக்காக நீ எதற்கு உன் பிராணனை விடப்போகிருய்? அந்திய காலத்தில் நான் சொல்லும் வார்த்தையைக் கேள். நீ தனியே ஓரிடமும் செல்லாதே. நீ இங்கேயே இரு; என் சிநேகிதர்களிடத்தில் உன்னைக் கவனித்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுப் போகின்றேன். அவர்களை அநுசரித்து நடந்துகொள். நான் போகின்றேன்.

இவ்வாறு சொல்லிவிட்டுக் கன்றை அநேகம் தடவைகள் நாக்கினுல் நக்கிக் கொடுத்து குழந்தையிடமிருந்து தன் சாசுவதமான பிரிவை நினைத்து மிகக் கஷ்டத்துடன் நந்தினி தன்னுடைய உற்ருர் உறவினர்களைப் பார்க்கச் சென்றது. அவர்களிடம் பின்வருமாறு சொல்லிற்று.

நந்தினி:— ஹே, பகுலி. ஹே, சம்பகி. ஹே, தாமி. மற்றும் என் சிநேகிதர்களே. நான் சொல்வதைக்

கேளுங்கள். நான் சுயேச்சையாகக் காட்டில் புல் மேய்ந்து கொண்டிருக்கும்பொழுது, ஒரு கடுவாய் என்னைக்கொல்ல வந்தது. நான், என் குழந்தையையும் உங்களையும் பார்த்துப் பேசிவிட்டு திரும்பி வருவதாகக் கடுவாயிடம் சபதங்கள் கூறியதன்பேரில் அது எனக்கு இங்குவர அனுமதி கொடுத்தது. என் குழந்தையைப் பார்த்துப் பேசியாகி விட்டது. அவனை உங்களிடம் ஒப்படைக்கிறேன். அறிந்தோ, அறியாமலோ கொஞ்சம் நான் அபராதம் செய்திருக்கலாம். அதை தயவு செய்து மன்னிக்க வேண்டும். இந்த பால்குடி மாருத என் குழந்தை அநாதை. தாயின் பிரிவினுல் தவிக்கின்ற இவன் உங்களால் காப்பாற்றப்பட வேண்டியவனுக இருக்கின்ருன். செய்யத் தகாத காரியங்களில் அவன் ஈடுபட்டால் ஆதரவுடன் அவனை அதிலிருந்து நிவிர்த்திக்கும்படி உங்களைப் பிரார்த்திக்கின்றேன். கடுவாயிடம் போகின்றேன். கடைசியான என் நமஸ்காரங்கள் உங்களுக்கு.

பசுக்கள்:— நீ, கடுவாயிடம் போகவேண்டாம். இங்கேயே இருந்து உன் குழந்தையைக் காப்பாற்று. உனக்கு தர்மம் தெரியவில்லை. ஆபத்திற்குப் பாபமில்லை. சபதத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியமில்லை.

நந்தினி:— அந்நியரின் பிராணனை ரக்ஷிப்பதற்குத் தான், பொய்ச் சபதங்கள் கூறுவது தர்மமாகும். தன்னுடைய பிராணனைக் காப்பாற்ற அவ்வாறு செய்வது பாபமேயாகும். ஆகையால் நான் கடுவாயிடம் போகத் தான் வேண்டும்.

பசுக்கள்.— நீ, தேவர்களாலேயும் நமஸ்காரம் செய்யத் தகுந்தவளாக இருக்கின்ருய். சபதத்தை நிறை

வேற்ற பிராணனையும் விடத் தயாராக இருக்கின்றாய். சரி, நீ போ. உன் குழந்தையைப் பற்றி சிறிதேனும் கவலைப் படவேண்டாம். நாங்கள் கவனித்துக் கொள்கிறோம்.

நந்தினியும், புத்திரனுடைய பிரிவை நினைத்து, நினைத்து வருந்தினாலும் சபதத்தை நிறைவேற்ற வேண்டு மென்ற எண்ணத்துடன் கடுவாயிடம் சென்று தன்னுடைய வரவை அதனிடம் தெரியப்படுத்தியது. நந்தினியைக் கண்ட கடுவாய் ஆச்சரியத்தை அடைந்து “ஏ, உண்மை பேசும் மங்களவதி. உண்மை பேசுபவர்களுக்கு ஒருநாளும் அசுபம் ஏற்படாது. நீ, உன் குழந்தையிடம் க்ஷேமமாக இரு. சாதுவான உன்னுடைய சங்கத்தினால் எனக்கு நல்ல கதி ஏற்படும். உனக்குத் தெரியாத தர்மம் ஒன்றுமில்லை. இந்த மஹா பாபியான எனக்கு நல்ல கதி உண்டாக ஒரு உபாயம் சொல்லு என்றது. இவ் வார்த்தைகளைக் கேட்ட நந்தினி, “சமீபத்தில் ஒரு சிவலிங்கம் இருக்கின்றது. அந்த லிங்கத்திற்கு நான் பக்தியுடன் பாலபிஷேகஞ் செய்தேன். அதனால் தான் இப்பொழுது மரணத்திலிருந்து தப்பினேன். அந்த லிங்கத்தை நீ பார்த்தால் உன் பாபம் அகலும்; மேன்மையுண்டாகும்” என்று கடுவாயிடம் சொல்லிற்று.

நந்தினியின் வார்த்தைகளைக் கேட்டு, கடுவாய் சிவ லிங்கத்தைத் தரிசனஞ் செய்ததும் கடுவாயின் சுவரூபம் மறைந்து அரசனான கலசனின் சுவரூபம் தோன்றிற்று. நந்தினியும் கோகுலத்தை அடைந்து குழந்தையுடன் சௌக்கியமாக இருந்தது.

மேற்சொன்ன சரித்திரம் "ஸ்காந்தம்" என்னும் மஹாபுராணத்திலுள்ளது. இச் சரித்திரம் மும்பிறவிகளில் நற்செய்கைகளையே அப்பியசித்துவந்த ஒருவன் ஒரு பாபத்தினுல் பசுவின் ஜன்மாவை அடைந்தாலும் அந்தப் பசு ஜன்மாவிலும் கூட மனது சத்வாசனைகளுக்கு இருப்பிடமாக இருந்துகொண்டு நற்செய்கைகளையே செய்யும்படி தூண்டும் என்று புலப்படுத்துகின்றது.

சாஸ்திரத்தை அதாவது விதிக்கப்பட்ட தர்மங்களை, அப்பியசித்து வந்தால் ஸத்வாசனை ஏற்படுவதுபோல உச்சாஸ்திரத்தை அதாவது அதர்மங்களை, அப்பியசித்து வந்தால் கெட்ட வாசனையும் ஏற்படும். உச்சாஸ்திரத்தினுல் ஏற்பட்ட வாசனையை சாஸ்திரதத்தினுல் வெல்லவேண்டும். இது வரையிலும் உச்சாஸ்திரத்தையே அனுஷ்டித்து வந்தவனுக்கு சாஸ்திரதத்தில் ருசி ஏற்படாது. ஆனுலும் பிரயத்தனத்தினுல் அதைச் செய்யவேண்டும். சாஸ்திரதத்தில் ருசியில்லாவிடில் எவ்வாறு அதில் பிரயத்தனம் ஏற்படும், என்று கேட்பது தவறு. ருசியில்லாவிடினும் ஹிதந்தருவதை உத்தேசித்து ஆமணக்கெண்ணெய் சாப்பிடுவதில் மனஞ்சென்று அதைப் பருகுகின்றதில்லையா? அதுபோல சாஸ்திரங்களிலிருந்து ஹிதத்தையும், அஹிதத்தையும் அறிந்துகொண்டு ஹிதத்தில் ருசியில்லாவிடினும் ஹிதம் என்று எண்ணி அப்பியாசம் செய்யவேண்டும். இடைவிடாத அப்பியாசத்தால் வாசனை பலக்கும்.

பழத்தைக் கொடுத்து, சிறு குழந்தைகளை மண் உண்பதிலிருந்து நிவிர்த்தி செய்ய ஸாத்தியமாக இருப்பது போல, வாசனையை ஸத்சங்கத்தால் கெட்ட விஷயத்திலிருந்து நிவாரணஞ் செய்துகொள்ளவும் ஸாத்தியம்தான்

என்று ஸ்ரீ வித்யாரண்ணிய சுவாமிகள் ஜீவன் முக்தி விவேகம் என்ற நூலில் கூறியிருப்பதும் இங்கு கவனிக்கத் தகுந்தது.

ஒருவன் நல்ல கர்மாக்களேயே செய்துகொண்டு வந்தால் வரும் ஜன்மாக்களில் அவ் வாசனையிருக்குமாதலால் அந்த ஜன்மாக்களிலும் நல்ல கர்மாக்களைச் செய்வதிலேயே பிரவர்த்தி ஏற்படும். தர்மத்திலிருந்து விலகுவதற்கு மனம் இடங் கொடுக்காது. பிராணனுக்கு ஆபத்து வந்தாலும் கூட சத்கர்மாவைச் செய்வதில்தான் மனம் நோங்கும். சத்கர்மாவைச் செய்வது சுவபாவமாக (வாசனையாக) ஆகும். அதனுல் கருணையைச் சுவபாவமாக உடைய பகவானுடைய பிரசாதத்திற்குப் பாத்திரனுவான். ஈசுவரப் பிரசாதத்தால் பாபங்கள் தங்களுடைய பலனுன துக்கத்தைக் கொடுக்காமல் நிற்கும். சத்வாசனையைச் சம்பாதித்தவனுக்கு சத்கர்மாக்களில்தான் பிரவிருத்தி ஏற்படுமாதலால் அவன் ஈசுவரனுடைய பிரசாதத்தை அடைந்து தத்வஞான மேற்படும் வரை பாபபலன்கள் தன்னை அணுகாமலிருக்கும்படி செய்துகொள்வான்.

கருணையைச் சுவபாவமாக அதாவது இயற்கையாக உடைய எல்லாம் வல்லவரான கடவுள் பிராணிகளின் கர்மாக்களை அபேக்ஷியாமல் அவர்களுடைய துக்கத்தை ஏன் நிவிருத்திக்கக்கூடாது என்று ஒருவர் கேட்கலாம். ஆனுல் கடவுளுக்குக் கருணை என்பது எவ்வாறு இயற்கையாக அமைந்திருக்கின்றதோ அதுபோல "கர்மாவை அனுசரித்துப் பலனைக் கொடுக்கும் தன்மையும்" அவருக்கு இயற்கையாகவே அமைந்திருக்கின்றது என்று அறியவேண்டும். இந்த இயற்கையை அவர் மாற்றிக்கொள்ளட்டுமே என்று கேட்கக்கூடாது. சூரியனுக்குப் பிரகாசம் என்பது

இயற்கையாக அமைந்திருக்கின்றது. அந்தப் பிரகாசத்தை சூரியன் மாற்றிக்கொள்ளட்டுமென்றால் சூரியன் சூரியனாக இல்லாமலிருக்கட்டும் என்று கூறினதாகத்தான் ஆகும். அதுபோல் தனக்கு இயற்கையாக அமைந்துள்ள "கர்மாவை அனுசரித்துப் பலனைக்கொடுக்கும் தன்மையை" ஈசுவரன் மாற்றிக் கொள்ளட்டுமென்று கேட்பது, ஈசுவரன் ஈசுவரனாக இல்லாமலிருக்கட்டுமென்று கேட்டதாக ஆகும்.

ஆகவே, முன் பக்கங்களிலிருந்து பௌருஷத்தால் விதியை நாசஞ் செய்ய முடியும் என்ற முதலாவதாகச் சொல்லப்பட்ட சித்தாந்தத்தை அநுசரித்தும், விதியை நாசஞ்செய்ய முடியாது என்ற இரண்டாவதாகச் சொல்லப்பட்ட சித்தாந்தத்தை அநுசரித்தும் முற்பிறவியில் செய்யப்பட்ட கர்மாவை அனுபவிக்காமலிருக்கும்படி பௌருஷத்தால் செய்துகொள்ள முடியும் என்று அறிந்து கொண்டோம்.

இரண்டாவது சித்தாந்தத்தில் பின்வருமாறு சொல்லப்போகும் விஷயமும் அறியத் தகுந்தது என்று என் தாழ்மையான அபிப்பிராயம். விதிக்குத் தன்னுடைய பலனைக் கொடுக்கவேண்டுமென்ற ஆக்கிரஹம் இருக்குமானால் முறைப்படி அனுஷ்டானஞ் செய்யப்பட்ட பரிஹாரமாகின்ற இப்பொழுது செய்யப்படும் கர்மாவிற்கும் விதியின் பலன் எக்காலத்திலும்ஏற்படாத வண்ணம் பார்த்துக் கொள்ளவேண்டுமென்ற ஆக்கிரஹம் இல்லாமலிருக்காது. ஆகையால் பரிஹாரம் செய்து விதியை எக்காலத்திலும் அனுபவிக்காமலிருக்கும்படி செய்து கொள்ள முடியும்.

விதியைப் பரிஹாரத்தால் ஒத்திப் போட்டுக்கொள்ள முடியும் என்றும் ஆனால் மறு ஜன்மாவில் தொடருமென்றும் முன் கூறப்பட்டதே என்றால் அது வியாதி முதலிய பலன் வடிவமாக உருவெடுத்து நிற்கும் முற் பிறவியில் செய்யப் பட்ட கர்மாவை மனதில் வைத்துக்கொண்டு சொல்லப் பட்ட விஷயமே தவிர, பலன் வடிவமாக உருவடையாமல் இருக்கும் முற்பிறவியில் செய்யப்பட்ட கர்மாவையும் மனதில் வைத்துக்கொண்டு சொல்லப்பட்ட விஷயமில்லை என்று அறியவேண்டும். பலன் வடிவமாக உருவெடுத்த பிறகும் கூட கர்மாவையே பரிஹாரத்தால் சிறிது காலம் ஒத்திப் போட்டுக்கொள்ள முடியும் என்றால் அவ்வாறு உரு வெடுக்காத கர்மாவைப் பரிஹாரத்தால் தன்னை அணுகாமல் இருக்கும்படி "நிரந்தரமாக" ஒத்திப் போட்டுக்கொள்ள முடியும் என்பதில் என்ன சந்தேகம்? நதியில் ஏற்படும் பிரவாஹம் ஒரு தேசத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருக்கும் சமயத்தில் அணை போட்டால் அந்த அணை சிறிது காலம் தான் அத்தேசத்தை ரக்ஷிக்கும். அவ்வாறில்லாமல் பிர வாஹம் ஏற்படுவதற்கு முன்பே அணை போட்டால் அணையைப் பலமாகப் போடமுடியுமாதலால் அந்த அணை யினால் அத்தேசத்தை நிரந்தரமாக ரக்ஷிக்க முடியுமல்லவா?

எனவே, நித்திய நைமித்திக கர்மானுஷ்டானம் செய்வதுடன் மஹா பாபங்களையும் விலகியிருக்கும்படி செய்யக்கூடிய தானம் முதலான கர்மாக்களையே சிரத்தா பக்தியுடன் ஒருவன் செய்து வந்தால் அந்த ஜன்மாவிலும் அதற்குப் பின் சம்பவிக்கக் கூடிய ஜன்மாக்களிலும் பாபங்

களின் பலன்களை அனுபவிக்காமலிருப்பதுடன், சத் கர்மாவையே செய்துகொண்டு வந்ததாலேற்பட்ட சத் வாசனையை அடைந்து மேன்மேலும் சத் கர்மாக்களையே அனுஷ்டிப்பதில் ஆசையுடன் பிரவிருத்திக்கவும் செய்வான். ஈசுவரப் பிரசாதத்திற்குப் பாத்திரனாகப் பவித்து, என்றும் அழியாத ஆனந்தத்தை அடைவான்.

இரண்டாவது சித்தாந்தத்தை அனுசரித்து புராதனமான கிரந்தங்களில் "கர்மா பாபத்தை நாசம் செய்யும்" "கர்மா பாபத்தின் க்ஷயத்திற்குக் காரணம்" என்ற இது முதலான வாக்கியங்கள் கூறப்படும் இடங்களிலெல்லாம் கர்மாவினால் பாபம் தன்னுடைய காரியத்தைச் செய்யாமல் இருக்கும்படி செய்யப்படுகின்றது என்று மனதில் வாங்கிக்கொள்ளவேண்டும்.

சாக்கடை ஜலத்திற்கும் கூட மங்கள சுவரூபமான கங்கா பிரவாஹத்தை அடைந்து மங்களமாக இருக்கும் மஹிமை எப்படி கிடைக்கின்றதோ அதுபோல மங்கள சுவரூபமான சச்சிதானந்த சுவரூபத்தைக் காட்டிலும் வேறில்லாத என் பிதா அவர்களுக்கு இந்த கிரந்தமானது அர்ப்பணம் செய்யப்படுவதால் அது அந்த மங்கள சுவரூபத்தை அடைந்து மங்களமாகப் பவிக்கும் என்று நான் பூர்ணமாக நம்புகின்றேன்.